மீதமுள்ள 3 மீனவர்கள் கரை திரும்பவில்லை. அவர்களைத் தேடும் பணிகளை மேற்கொள்ள இந்திய கடலோரக் காவல் படையினர் மற்றும் Coast Guard–க்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. விரைந்து தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பிரின்ஸ், உட்காருங்கள். (குறுக்கீடு) திடீரென்று நீங்கள் எழுந்து நின்றீர்களென்றால் எப்படி? எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். என்னுடைய முயற்சிக்கு இடையூறு செய்தால் எப்படி? இதுவரை, மாண்புமிகு அமைச்சர்களின் பதிலை உறுப்பினர்களுக்குப் பெற்றுக் கொடுத்திருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்திற்கு உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகள் குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து கருத்துகளைச் சொல்லலாம். சுருக்கமாகச் சொன்னால் நிறைய உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க முடியும். அவற்றை மாண்புமிகு அமைச்சர்கள் குறித்துக்கொண்டு, அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள். ஆனால், இன்று நேரம் குறைவாக இருப்பதால் அவற்றுக்குப் பதில் சொல்ல நேரமில்லை என்பதைத் தெரிவித்து, உறுப்பினர்கள் சுருக்கமாகச் சொல்லி அரசின் கவனத்தை மட்டும் ஈர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

(அஆ) கடலூர் மாவட்டம், கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத் தொகையை வழங்குதல்

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்திலுள்ள எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கடந்த 2014 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரையில் கிட்டத்தட்ட பத்தாயிரம் விவசாயிகள் பயிர் செய்த கரும்புக்கான தொகையில் இதுவரை ரூ.40 கோடியை அரசாங்கம் பாக்கி வைத்திருக்கிறது. குறிப்பாக, இந்த ஆண்டு 928 டன் கரும்பினை நான் பயிர் செய்து, அதற்குரிய தொகை ரூ.24 இலட்சம் வழங்கப்பெற வேண்டிய நிலையில் ரூ.7 இலட்சம்தான் எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்காக என்னுடைய நிலையைப் பற்றிச் சொன்னேன். ஆனால், ரூ.24 இலட்சம் மதிப்பீட்டிற்கு கரும்பு உற்பத்தி செய்வதற்கு ரூ.20 இலட்சம் செலவாகிறது. இலாபம் ரூ.4 இலட்சம்தான் கிடைக்கும். ஆனால், அரசாங்கத்திடமிருந்து நாங்கள்

2019 ஜூலை 20] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

உழைத்ததற்கான பலன்கள் கிடைக்கவில்லை. இந்த ஆண்டு நாங்கள் பயிர் செய்த. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சுருக்கமாகச் சொல்லுங்கள். மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசுவது போன்று நீங்கள் பேசினால் மற்றவர்களுக்கு வாய்ப்பு கிடைக்காது. இனிமேல், நான் மணியை அடிக்கமாட்டேன். எப்படிப் பேசுகிறீர்களோ, பேசுங்கள். இந்த அலுவலை முடிக்க இன்னும் சிறிது நேரம்தான் இருக்கிறது. ஒவ்வொரு அலுவலுக்கும் குறிப்பிட்ட நேரம் இருக்கிறது. அதற்குப் பிறகு நான் எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அழைக்க வேண்டும். நீங்கள் உங்கள் சௌகரியம்போல் சொல்லலாம். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். அவருக்கு அங்குள்ள நிலைமைகளெல்லாம் தெரியும். பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளும் அவர்களிடம் புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் இந்த அவையில் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரு விவசாயிதான். அவர்களுக்கான உற்பத்திச் செலவுத் தொகையைக் கொடுத்தால்கூட போதும். அத்தகைய நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுடைய உணர்வைப் புரிந்துகொண்டு, இந்த அரசாங்கம் விவசாயிகள் உற்பத்தி செய்த கரும்புக்கான தொகையை வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார்.*

(அஇ) திருநெல்வேலி தொகுதி, கண்டியபேரி அரசு மருத்துவமனை பணியினை முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று நேரமில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.*

முற்பகல் 11—00

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கண்டியபேரி அரசு மருத்துவமனைக்கு கடந்த ஆண்டு ரூ.30*